**சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் தொடர்பானது,**

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையமானது 1989ஆம் ஆண்டு தொடக்கம் பல்வேறு வழிமுறைகளினூடாக மதுசாரம், புகைப்பொருள், ஏனைய போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக வெவ்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற ஒரு வள நிலையமாகும். உலக சுகாதார ஸ்தாபனம் உட்பட சர்வதேச மற்றும் தேசிய நிறுவனங்களிடமிருந்து எமது நிறுவனமானது அங்கீகாரத்தை பெற்றுள்ளமைக் குறிப்பிடத்தக்கது. சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் போதைப்பொருள் பாவனையை தடுப்பதற்காகவும், தற்போது பாவனையில் ஈடுபடுவோர் அவற்றிலிருந்து விடுதலையாவதற்கான உதவிகளை மேற்கொள்ளவும் பல்வேறு செயற்றிட்டங்களை நாடளாவிய ரீதியில் நாம் செயற்படுத்தி வருகின்றோம். அந்த வகையில் சர்வதேச புகையிலை தடுப்பு தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலான பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம்.

வருடாந்தம் மே மாதம் 31ஆம் திகதி புகைத்தல் பாவனை தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காக புகைத்தல் தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. 2025ஆம் ஆண்டிற்கான உலக புகைத்தல் தடுப்பு தினத்தின் தொனிப்பொருளாக "புகையிலை பொருட்கள் தொடர்பான தொழில்துறை தலையீடுகளை வெளிக்கொணருவோம்" என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் முன்வைத்துள்ளது.

புகைத்தல் பாவனையால் எமது நாட்டில் தினமும் சுமார் 55 பேர் அகால மரணமடைகின்றனர். மரணமடையும் வாடிக்கையாளர்களை ஈடு செய்து தமது இலாபத்தை தக்க வைத்துக்கொள்வதற்காக புகையிலை நிறுவனமானது சிறுவர்களையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து பல்வேறு தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றமைக் குறிப்பிடத்தக்கது. அவ்வாறான தலையீடுகளை வெளிக்கொணர்ந்து எதிர்கால சந்ததியினரை புகையிலையிலிருந்து விடுதலையான சமூகமாக மாற்றுவதற்கு 2025ஆம் ஆண்டின் உலக புகைத்தல் தடுப்பு தினம் வழிவகுக்கின்றது.

மே 31ஆம் திகதியை முன்னிட்டு தங்களது பாடசாலையில் மேற்கொள்ளக்கூடிய விழிப்புணர்வு செயற்பாடுகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அவைகளை 29.05.2025 – 06.06.2025 வரை செயற்படுத்தி மாணவர்கள் மத்தியில் புகைத்தல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். மேலும் இச்செயற்பாடுகளை சிறப்பாகவும், ஆக்கப்பூர்வமானதும் மேற்கொள்ளும் பாடசாலைகள் மற்றும் பொறுப்பாசிரியர்களுக்கான சான்றிதழை வழங்கி கௌரவிப்பதற்கும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் எதிர்ப்பார்க்கின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்காகவும் எமது நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட அதிகாரி திருமதி. நிதர்ஷனா அவர்களை தொடர்புகொள்ளவும் 0711921300 / 0772229930.

நன்றி,

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம்

## பாடசாலைகளில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள்

01. இக்கடிதத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவித்தல், துண்டுபிரசுரம் ஆகியவற்றை தங்களது பாடசாலையின் அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தவும்
02. பிள்ளைகளின் ஆக்கப்பூர்வமான திறமைகளைக் கொண்டு பதாகைகளை வடிவமைத்து பாடசாலையில் காட்சிபடுத்தல்
03. காலைக்கூட்டங்களின் போது இதுதொடர்பான விழிப்புணர்வு சொற்பொழிவுகளை மேற்கொள்ளல்
04. ஆசிரியர்கள், 03 - 05 நிமிட நேரத்தைக் கொண்ட வழிப்புணர்வு தகவல்களை வகுப்பறையில் மாணவர்களுக்கு கூறுதல்
05. மாணவர்களுக்கான சித்திரம், ஆக்கப்பூர்வமான அறிவித்தல் வாசகங்களை உருவாக்குதல் போன்ற போட்டிகளை நடாத்துதல்
06. பாடசாலைக்கு அருகாமையில் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் இருப்பின் அவற்றிற்கு இதனுடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்டிக்கர்களை வழங்குவோம் அல்லது ஏதேனும் பிரதிபலிப்புக்களை வழங்குதல்.

**குறிப்பு : சிகரட் படங்கள், தடை வாசகங்கள், புகைத்தலை கவர்ச்சியாக்கப்படும் படங்கள் அல்லது வசனங்களை சொற்பொழிவுகளிலோ, சித்திரங்களிலோ இணைப்பதை தவிர்த்துக்கொள்ளுங்கள்.**

**கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்களுக்கு அமைவாக உங்களின் அனைத்து செயற்பாடுகளை மேற்கொள்ளவும்.**

I. சமூக வலைதளங்களின் ஊடாக மேற்கொள்ளப்படும் புகையிலை விளம்பரங்களுக்கு ஏமாறாமல் இருப்போம்
II. திரைப்படங்களில் புகைத்தல் விளம்பரங்களை இணைத்து சிறுவர்களையும், இளைஞர்களையும் ஏமாற்றுவது புகையிலை நிறுவனத்தின் சதித்திட்டமாகும், அவற்றிற்கு ஏமாறாமல் இருப்போம்
III. அறிவுள்ள பிள்ளைகள் சிகரட், தூள் போன்றவைகளுக்கு ஏமாறமாட்டார்கள்
IV. புகைத்தல் பாவனையை ஊக்குவிக்கும் நபர்களை அல்லது செயற்பாடுகளை அறிந்து கொள்வோம்! ஏமாறாமல் இருப்போம்!
V. சிறுவர்களை ஏமாற்றும் சிகரட் நிறுவனத்திற்கு ஏமாறாமல் இருப்போம்
VI. புகையிலை நிறுவனத்தின் விளம்பரங்களை வெளிக்கொணருவோம்

QR ஐ SCAN செய்து WhatsApp குழுமத்துடன் இணைந்து கொள்ளுங்கள். நீங்கள் மேற்கொள்ளுகின்ற செயற்பாடுகளை அந்த குழுவிற்கு தங்களின் பாடசாலையின் பெயர், வலயம் மற்றும் மாவட்டத்தைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.